# யூலை- 27- வியாழன்

### தூய இன்னோசென்ட்

**உள்ளவருக்குக் கொடுக்கப்படும்: அவர் நிறைவாகப் பெறுவார். மாறாக, இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். மத். 13:12**

## முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 19:1–2,9-11,16-20

எகிப்து நாட்டினின்று புறப்பட்டு வந்த மூன்றாம் மாதம் முதல் நாளில் இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலைநிலத்தைச் சென்றடைந்தனர்.இரபிதீமிலிருந்து பயணம் மேற்கொண்ட அவர்கள் சீனாய் பாலைநிலத்தை வந்தடைந்து, பாலை நிலத்தில் பாளையம் இறங்கினர். அங்கே மலைக்கு முன்பாக இஸ்ரயேலர் பாளையம் இறங்கினர். ஆண்டவர் மோசேயை நோக்கி, ”இதோ! நான் உன்னோடு பேசுவதை மக்கள் கேட்கும்படியும் என்றென்றும் உன்னை நம்பும்படியும் நான் கார்மேகத்தில் உன்னிடம் வருவேன்” என்றார். மோசேயும் மக்களின் வார்த்தைகளை ஆண்டவருக்கு அறிவித்தார்.ஆண்டவர் மோசேயை நோக்கி, ”நீ மக்களிடம் போய் அவர்களை இன்றும் நாளையும் தூய்மைப்படுத்து. அவர்கள் தம் துணிகளைத் துவைத்துக் கொள்ளட்டும்.இவ்வாறு மூன்றாம் நாளுக்காகத் தயாராகட்டும். ஏனெனில், மூன்றாம் நாள் மக்கள் அனைவர்க்கும் முன்பாக ஆண்டவர் சீனாய் மலைமேல் இறங்கிவருவார். மூன்றாம் நாள் பொழுது புலரும் நேரத்தில் பேரிடி முழங்கியது. மின்னல் வெட்டியது. மலைமேல் மாபெரும் கார்மேகம் வந்து கவிழ்ந்தது. எக்காளப் பேரொலி எழுந்தது. இதனால் பாளையத்திலிருந்த அனைவரும் நடுநடுங்கினர்.கடவுளைச் சந்திப்பதற்காக மோசே மக்களைப் பாளையத்திலிருந்து வெளிவரச் செய்தார். அவர்களும் மலையடிவாரத்தில் வந்து நின்றார்கள்.சீனாய் மலை முழுவதும் புகைந்து கொண்டிருந்தது. ஏனெனில் ஆண்டவர் அதன்மீது நெருப்பில் இறங்கி வந்தார். அதன் புகை தீச்சூளையிலிருந்து எழும் புகைபோல் தோன்றியது. மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது.எக்காள முழக்கம் எழும்பி வர வர மிகுதியாயிற்று. மோசே பேசியபோது கடவுளும் இடிமுழக்கத்தில் விடையளித்தார்.ஆண்டவர் சீனாய் மலைமேல் மலையுச்சியில் இறங்கி வந்தார். அப்போது ஆண்டவர் மோசேயை மலையுச்சிக்கு அழைக்க, மோசே மேலே ஏறிச்சென்றார்.

**பதில்பாடல் :** என்றென்றும் நீர் புகழ் பெறவும் போற்றப் பெறவும் தகுதியுள்ளவர்.

## நற்செய்தி : மத்தேயு 13 : 10 – 17

அக்காலத்தில் சீடர்கள் இயேசு அருகே வந்து, ”ஏன் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகின்றீர்?” என்று கேட்டார்கள்.அதற்கு இயேசு அவர்களிடம் மறுமொழியாகக் கூறியது : ”விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை.உள்ளவருக்குக் கொடுக்கப்படும் அவர் நிறைவாகப் பெறுவார். மாறாக, இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்.அவர்கள் கண்டும் காண்பதில்லை. கேட்டும் கேட்பதில்லை. புரிந்து கொள்வதுமில்லை. இதனால்தான் நான் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகிறேன்.இவ்வாறு எசாயாவின் பின்வரும் இறைவாக்கு அவர்களிடம் நிறைவேறுகிறது ”நீங்கள் உங்கள் காதால் தொடர்ந்து கேட்டும் கருத்தில் கொள்வதில்லை. உங்கள் கண்களால் பார்த்துக் கொண்டேயிருந்தும் உணர்வதில்லை.இம்மக்களின் நெஞ்சம் கொழுத்துப்போய்விட்டது. காதும் மந்தமாகிவிட்டது. இவர்கள் தம் கண்களை மூடிக்கொண்டார்கள் எனவே கண்ணால் காணாமலும் காதால் கேளாமலும் உள்ளத்தால் உணராமலும் மனம் மாறாமலும் இருக்கின்றார்கள். நானும் அவர்களைக் குணமாக்காமல் இருக்கிறேன்.”உங்கள் கண்களோ பேறுபெற்றவை ஏனெனில் அவை காண்கின்றன. உங்கள் காதுகளும் பேறுபெற்றவை ஏனெனில் அவை கேட்கின்றன.நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் பல இறைவாக்கினர்களும் நேர்மையாளர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண ஆவல் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை“ என்றார்.

**தியானம் :** இயேசுவோடு நெருங்கிப் பழகியவர்கள் பேதுரு முதலிய பன்னிருதிருத்தூதர்கள் மற்றும் மரியா, மார்த்தா போன்ற சீடர்கள் இவர்களுடைய கண்கள் பேறுபெற்றவை என இயேசு கூறியது எதற்காக? இங்கே இயேசு தம் சீடரின் புறக்கண்கள் பற்றி மட்டும் பேசவில்லைஅவர்களுடைய அகக்கண்கள் பற்றிப் பேசுகின்றார். இயேசுவின் போதனையை கேட்ட மனிதர் நூற்றுக்கணக்கில் இருந்தனர். அவர் ஆற்றிய அரும் செயல்களைக் கண்டவர்கள் ஆயிரக்கணக்கிலி இருந்தனர் ஆனால் இயேசுவைக் கண்டு அவர் பேசியதைக் கேட்ட எல்லா மனிதரும் அவர் யார் என்பதைப் புரிந்துகொள்ளவில்லை. அவருடைய சீடர்கள் தான் அவர் யார் என்பதை தெரிந்துகொண்டார்கள். இயேசு கடவுளிடமிருந்து வந்தவர் என்றும் கடவுளின் ஆட்சி பற்றிய நற்செய்தியை அறிவித்து இறைவாழ்வில் நாம் பங்குபெற இயேசு சிலுவையில் இறந்து நமக்காக புத்துயிர் பெற்று எழுந்தார் என்றும் சீடர்கள் தம் இதய ஆழத்தில் உணர்ந்தனர். இத்தகைய அறிவை அவர்கள் பெறுவதற்கு தூய ஆவியின் துணைஅவர்களுக்கு அளிக்கப்பட்டது அந்த ஆவி உயிர்த்தெழுந்த இயேசுவின் உடனிருப்பே. எனவே சீடர்களின் கண்கள் பேறுபெற்றன. இன்று வாழ்கின்ற சீடர்களாகிய நாமும் இயேசு யார் என்பதை கண்டுகொள்ள அழைக்கப்படுகின்றோம் நம்பிக்கையோடு நாம் அவரைஅணுகிச் சென்றால் அவரை நாம் அடையாளம் கண்டுகொள்வோம் அப்போது நாமும் உண்மையிலே பேறுபெற்வர்கள் ஆவோம் ஆமென்.